அங்கே நோயாளிகள் 1,400 பேர்கள் இருக்கிறார்கள். இதே நிலை பல வேறு இடங்களிலும் இருக்கிறது. இந்த நிலையை மாற்ற இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அதைப்பற்றிக் கனம் உறுப்பினர் அவர்களுடைய கருத்து பரிசீலனை செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது சிதம்பரம் நகர மருத்துவ மனையைப் பற்றிய வினா. திரு. ரா. ரா. முனுசாமி அவர்கள் அதைப்பற்றி கேட்பார்கள்.

திரு. ரா. ரா முனுசாமி : செஞ்சி வட்டத்தில் அனந்தபுரம், அவலூர்பேட்டை மருத்துவமனைகளில் சரியான முறைப்படி டாக்டர் இயங்கவில்லை என்ற காரணத்தினால், சுற்றி ஏராளமான கிராமங்கள் இருப்பதால், அங்கு ஒரு எம். பி. பி. எஸ். டாக்டர் போட அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா?

(பதில் இல்லை.)

நகர மன்ற ஆணையாளர்கள்

*114 வினா—**திரு. கே. பி. எஸ். மணி :** மதிப்பிற்குரிய தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

தற்போது உள்ள முனிசிபாலிட்டிகளில் எத்தனை தாழ்த்தப்பட்ட வகுப்பை சேர்ந்த முனிசிபல் கமிஷனர்கள் உள்ளனர் ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : தற்போது 8 தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த நகராட்சி ஆணையர்கள் உள்ளனர்.

திரு. கே. பி. எஸ். மணி : மொத்தம் எத்தனை கமிஷனர்கள் இருக்கிறார்கள்? இந்திய அரசியல் சட்டப்படி கொடுக்கக்கூடிய 16 சத விகிதத்தின்படி அந்த 8 பேர்களுக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறதா? இன்னும் கொடுக்கவேண்டிய அவசியம் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : எல்லா வகையான நகராட்சிகளையும் சேர்த்து மொத்தம் 84 இருக்கிறது. அந்த நகராட்சிக்கு தேர்ந்தெடுக்கப்படுகிற முறை விகிதாசாரத்தின் அடிப்படையில் பிரமோஷன் கொடுக்கப்படுவதில்லை. உரிய விதிகளையும், தகுதியும் கொண்டுதான் கொடுக்கப்படுகிறது. அந்த வகையிலே 8 பேர்கள் இப்பொழுது பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள்.

திரு. மா. பா. சாரதி : உத்தியோக நியமனத்தில்தான் அந்த வகுப்புவாரி முறையை அனுஷ்டிக்கவேண்டும் என்பது விதி. உத்தியோகங்களுக்கும் அந்த வகுப்பு வாரி முறை அனுஷ்டிக்க வேண்டுமா என்று கேட்கிறேன். 100 கமிஷனர்கள் இருந்தால், அதற்குத் தகுந்தவாறு அரிஜனங்களுக்கு இவ்வளவு கமிஷனர் கொடுக்க வேண்டும் என்ற ஒரு விதி இருக்கிறதா என்று கேட்கிறேன்.

மாண்புமிகு திரு. எம். முத்துசாமி : அப்படிப்பட்ட விதி இல்லை என்றுதான் ஏற்கனவே அறிவித்திருக்கிறேன்.

THIRU K. VINAYAKAM ; Sir, in the matter of recruitment of these Commissioners to these municipalities, is it not a fact that they are not recruited on the basis of community and that they are promoted to this Office on account of their efficiency. In such an event, other things being equal, will not the case of the Depressed Classes be considered in preference to the men belonging to the other community ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : இந்த ஆணையாளர்கள் தேர்ந் தெடுக்கப்படுவதிலே இரண்டாவது தரமும் அல்லது அதற்கு மேற்பட் தரமும் பதவி உயர்வு மூலம் தேர்ந்தெடுக்கப்படுகிறது. மூன்றாவது முறை யில் வரக்கூடிய நகராட்சிகளுக்கு நேரடியாகவும், மற்றும் பதவி உயர்வு மூலமும் தேர்ந்தெடுக்கப்படுகிறது. அப்படி தேர்ந்தெடுக்கப்படும்பொழுது தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கும் உரிய இடம் கொடுத்து தேர்ந்தெடுக்கப்படுகிறது.

திரு. கே. பி. எஸ். மணி : 1964-ல் 2,756 எண்ணுள்ள சர்க்காருடைய உத்தரவுப்படி பஞ்சாயத்து யூனியன்கள், முனிசிபாலிடிகள் இவைகளுக்கு இப்படி விகிதாசாரப்படி தான் கொடுக்கப்படவேண்டும் என்று இருக்கி றது. அதன்படி நடவடிக்கை எடுக்காததற்குக் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : அதைப்பற்றி தனிக் கேள்வி கேட்டால் விவரம் அறிவிக்க முடியும்.

பீடி, சுருட்டுத் தொழிலாளர்கள்

*115 வினா—**திரு. ஆ. கு. சுப்பையா, திரு. சோ. அழகர்சாமி, திரு எ. பர்லசுப்பிரமணியன், திரு வி. கே. கோதண்டராமன்:** மதிப்பிற்குரிய சட்ட கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதில ளிப்பாரா—

(அ) பீடித் தொழிலாளர்கள், சுருட்டுத் தொழிலாளர்கள் நலன் களைப் பாதுகாப்பது சம்பந்தமாக பாராளுமன்றம் 1-11-66-ல் இயற்றிய சட்டத்தின் மீது மாநில அரசு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் எப் பொழுது எடுக்கப்படும்?

(இ) அச்சட்டத்தை தமிழ் நாட்டில் அமுல் படுத்த உத்தேசம் உண்டா?

(உ) ஆம் என்றால் எப்பொழுது அறிவிப்பு வெளியிடப்படும் ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) முதல் (உ) வரை இந்திய அரசினால் இயறறப்பட்ட 1966-ம் ஆண்டு பீடி, சுருட்டுத் தொழிலாளர்கள் (வேலை நிலைமைகள்) சட்டத்தின்படிக்கான விதிகளை மாநில அரசு இறுதி யாக இயற்றினால்தான், மேற்படி சட்டத்தின் விதித்துறைகளைச் செய லுக்குக் கொண்டு வருவது இயலும். இச்சட்டத்தின்கீழ் வகுக்கக்கூடிய மாதிரி வரைவு விதிகளை இந்திய அரசு வகுத்து வருகிறது. மேற்படி சட்டத்தின்கீழ் மாநில அரசுகள் விதிகளை இயற்றுவதற்கு உதவியாக இருக்கும் பொருட்டு மேற்படி வரைவு விதிகள் அவற்றிற்கு அனுப் பப்படும். அந்த மாதிரி வரைவு விதிகள் கிடைத்தவுடன், மேற்படி சட்டத் தின்கீழ் விதிகள் இயற்றுவதற்கும் அச்சட்டத்தை இம்மாநிலத்தில் செயல் படுத்துவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

திரு. ஆ. கு. சுப்பையா : நடைமுறையில் அமலில் இருக்கக்கூடிய இந்தச் சட்டம் பீடி சுருட்டு தொழிலாளர்களுக்கு சாதகமாக அமைய வில்லை. ஆகவே, அவர்களுக்குக் பயன் அளிக்கக்கூடிய முறையில் விரை வில் இந்தச் சட்டத்தைத் திருத்துவதற்கு ஆசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கனம் அங்கத்தினர் அவர்கள் குறிப்பிடுவது மாநில அரசாங்கத்தினுள்ள வேறு ஒரு சட்டம். இங்கே கேள்வியில் இருப்பது மத்திய சர்க்கார் சட்டத்தைப்பற்றியது. மத்திய சர்க்கார் எல்லா மாநிலங்களுக்கும் பயன் படும்படியாக ஒரு புதிய சட்டத் தைக் கொண்டு வந்து நிறைவேற்றியிருக்கிறார்கள். அந்தச் சட்டத்தை நம்முடைய மாநிலத்திலே வெகு விரைவிலே அமல்படுத்துவதற்கு முயற்சி எடுக்கப்படும்.

திரு. வி. கே. கோதண்டராமன் : மத்திய் சர்க்கார் வகுத்திருக்கக் கூடிய இந்தச் சட்டத்தை மாநில சர்க்கார் திருத்துவதற்கு அதிகாரம் உண்டு என்றாலும், அப்படி திருத்தக்கூடிய நேரத்தில் மத்திய சர்க்கார்